# வெற்றிமணி

மலர் 7 இதழ் 1

சிறுவர் மாத இதழ்



15-5-69 சதம் 30

நங்கையர் விரும்பும் நவநாகரீக
★ நகைகளுக்கும் ★ வைரங்களுக்கும்
புகழ்பெற்று விளங்கும் ஸ்தாபனம்

# கே. என். எம். மீரான் சாஹிப்

''தங்கப்பவுண் நகை மாளிகை''

கன்னதிட்டி தொலைபேசி: 585 யாழ்ப்பாணம்

*Visit*

# K. N. M. MEERAN SAHIB

JEWELLERS & DIAMOND MERCHANT

"SOVEREIGN PALACE"

**KANNATHIDDY** *Dial*: 585 **JAFFNA**

## வாய்வு சூரணம்

மலச்சிக்கல், மலக்கட்டு, உஷ்ண பித்த வாய்வுகள், கை கால் இடுப்பு மூட்டுகள் வலி பிடிப்பு- வயிற்று வலிக்குச் சிறந்தது. (பத்தியமில்லை)

150 கிராம் டின் ரூபா. 4-00

(தேவைக்கு எழுதவும்)

## வீரகேசரி மாத்திரை

ஜீவசக்தி கனவிலும், சிறுநீரிலும் வெளியாவதை கட்டுப்படுத்தி நாடி நரம்புகளுக்கு வலுவும் உறுப்புக்கு உறுதியும் இழந்த சக்தியும் நீடித்த சக்தியும் அளிக்கும்

100 பில்ஸ் ரூ. 25; 50—ரூ. 13, 24—ரூ. 7. (மெழுகு ரூ. 4)

(பார்சல் சார்சு தனி)

**பண்டிட்: S. V. R. கண்டர் சன்ஸ் R. I. M. P.**

அரிசிப்பாளையம், சேலம் - 9. (S. I.)

கிடைக்குமிடங்கள்:-

(1) ஆத்மஜோதி நிலையம், நாவலப்பிட்டி, சிலோன் (2) அமிர்தலால் அன் கோ. (மெடிக்கல் ஸ்ரோர்ஸ்) 146, நைனியப்ப நாயக்கன் தெரு, சென்னை- 3. (3) ராஜா மெடிக்கல், 31, தர்மராஜா கோவில் தெரு. பெங்களூர் கண்ட். (4) வல்லராம் 188 A, தாராவிரோடு, பம்பாய்-17



கௌரவ ஆசிரியர்: மு. க. சுப்பிரமணியம்

# வெற்றிமணி

## வருடச் சந்தா

பொங்கல் மலர்
தபாற்செலவுட்பட

| | | |
|---|---|---|
| இலங்கை | ரூபா. | 4-00 |
| இந்தியா | ரூபா. | 4-00 |
| மலாயா | $ | 4-00 |

★

## விளம்பர விகிதம்

| | | |
|---|---|---|
| வெளி அட்டை | ரூபா. | 50-00 |
| உள் அட்டை | ரூபா. | 35-00 |
| முதற் பக்கம் | ரூபா. | 30-00 |
| உட் பக்கம் | ரூபா. | 20-00 |

தொடர்ந்து விளம்பரஞ்செய்யின்
15 வீதக் கழிவுண்டு

விபரங்களுக்கு எழுதுக.

வெற்றிமணி
முள்ளியவளை — இலங்கை

## பொருளடக்கம்

தலையங்கம் ... ... ... ... 3
பேய்க் கலியாணம்... ... ... 4
இக்கால அருணகிரி ... ... 6
தாயும் சேய்களும் ... ... ... 8
நீங்களும் அறிந்திருக்கவேண். 10
நிலா நிலா ஓடிவா! ... ... 11
ஆஸ்திகம் ... ... ... ... 13
ஜீவகாருண்யம் ... ... ... 15
நேயர் குரல் ... ... ... ... 16
நாடகம் ... ... ... ... ... 17
அம்மாவுக்கு இணை அம்மா ... 21
கமத்தொழில் ... ... ... 22
குரங்கின் மடமை ... ... ... 23
நாடகக் கலையும் நாமும் ... 25
கணக்கியலுக்கோர் அறிமுகம் 26
கவிதை அரங்கம் ... ... ... 29
அறிவுப் போட்டி இல. 8 ... 32

— வெற்றிமணி —

வெற்றிமணி டாண் எனவே விண்முட்ட ஒலித்திடுவாய்
நற்றமிழாம் எங்கள்மொழி நலமுற ஒலித்திடுவாய்

மலர் 7. | வியாழக்கிழமை 15-5-69 | இதழ் 1

சன்மார்க்க சபை 1934

# எங்கள் நாடு எங்கள் அறிஞர்

தமிழ்மொழியை வளர்ப்பதிலும் அதன் கமழ் புகழைத் தரணியெங்கும் பரப்புவதிலும் ஈழவள நாடு என்றும் பின்னின்றதில்லை. தமிழ் கூறும் நல்லுலகத்தைச் சார்ந்த நாடுகளுள் ஈழநாட்டின் தமிழ்த்தொண்டு மகத்தானது. அச்சுக்கூடம் வைத்து நூல்கள் பல பதித்துத் தமிழுக்கு நடை பயிற்றுவித்த நாவலர் பெருமான், மூலை முடக்குகளிலே கிடந்த தமிழ் ஏடுகளைத் தேடி எடுத்து உலகுக்கீந்த உயர்திரு. சி. வை. தாமோதரம்பிள்ளை ஆகிய இரு ஆன்றோர்களும் தமிழன்னைக்கு ஆற்றிய பணிகள் ஈடு இணையற்றவை.

அவர்கள் வழிவந்த எத்தனையோ அறிஞர் பெருமக்களை ஈழத்தாய் காலந்தோறும் பெற்றெடுத்திருக்கிறாள். அவர்களின் தொண்டுகளைப் போற்றி, அவர்களின் கருத்துக்களைப் பின்பற்றி வாழ்க்கையில் உயர்வடைவது நமது கடனாகும்.

பெரியோர்களை மதிக்கவேண்டும் என்கின்ற மனப்பான்மை இக்காலத்திற் குன்றி வருகின்றது. மாணவர்கள் மத்தியில் இவ்வெண்ணம் அருகி வருவது ஆபத்தான எதிர்காலத்தையே காட்டுகின்றது.

எமது நாட்டுப் பெரியோர்களை மதித்து அவர்களைப் போற்றுகின்ற நல்லெண்ணத்தை மாணவர்கள் மத்தியில் பள்ளிக்கூடங்களும், ஊர்ச் சங்கங்களும் பெரியார்களும் வலுப்பெறச் செய்தல் வேண்டும். அப்பொழுது தான் எமது பாரம்பரியத் தனித்துவம் நிலைத்து நிற்கும்.

எங்கள் நாட்டு அறிஞர்களையும் அவர்களது அருமை பெருமைகளையும் எங்கள் நாட்டு நூல்களின் உயர்தரத்தையும் தெருவெல்லாம் முழங்கி வருதலையே மூச்சாகக் கொண்ட யாழ். இலக்கியவட்டம் அதன் மூன்றாவது ஆண்டு விழாவின்போது இலக்கியத் துறைக்கு ஆக்கபூர்வமான படைப்புக்களை அளித்த இரு பெரும் அறிஞர்களைப் பாராட்டி கௌரவித்த நிகழ்ச்சி நாட்டுப் பற்றையும் எங்கள் பெரியாரைக் கனம்பண்ணும் மனப்பான்மையையும் இலக்கிய இரசனையையும் வளர்ப்பதாய் அமைந்திருந்தது.

எங்கள் நாடு, எங்கள் அறிஞர், எங்கள் நூல்கள் என்று குரல் எழுப்பிய தலைவர் முழக்கத்தையும் சந்தக் கவிமணி சி. சின்னையா அவர்களையும், மக்கள் கவிமணி மு. இராமலிங்கம் அவர்களையும் பாராட்டிப் பேசிய அறிஞர்களின் பெருமிதப் பொழிவையும் கேட்ட உள்ளங்கள் உண்மையிலேயே எழுச்சி பெறாமல் இருக்க முடியாது.

# பேய்க் கலியாணம்

இரசிகமணி கனக. செந்திநாதன்

உங்கள் வீடுகளில் கலியாணம் நடைபெறப்போகிற தென்றல் உங்களுக்கிருக்கும் மனமகிழ்ச்சி எவ்வளவு? பந்தல் சோடனை, மாப்பிள்ளை அழைப்பு, பெண் வருகை ஐயர் செய்யும் சடங்குகள், மேளவாத்தியம், ஒலிபெருக்கியில் சினிமாப் பாடல்கள் எல்லாம் சேர்ந்து ஒரே குதூகலம்! வீடே திமிலோகப்படும். குழந்தைகளின் ஓட்டம் ஆட்டம் துள்ளல் சொல்லிமுடியாது. ஈழத்துக் கவிஞர் ஒருவர் சாதாரணமாக நடக்கும் எங்கள் வீட்டுக் கலியாணத்தைப்போல பேய்களின் கலியாண வைபவமொன்றைப் பாடியுள்ளார். தக்கயாகப் பரணி, கலிங்கத்துப் பரணி போன்ற பரணிநூல்களில் பேய்கள் கூழ்காய்ச்சி உண்ணும் காட்சி மிக நயம்படப் பாடப்பட்டிருக்கின்றன. அவற்றை வாசித்து இரசித்த இரசிகர்கள்கூட இந்தப் பேய்க் கலியாணத்தை இரசிக்கலாம்.

பேய்க் கலியாணம் நடக்கும் இடத்தின் வர்ணனையோடு காட்சி தொடங்குகிறது.

நீரோடி நெல் விளைக்கும் நீழ் வழுக்கை ஆற்றின், கரையில்இருக்கும் சுடுகாடு. ஒன்றல்ல! இரண்டு. இரண்டு சுடுகாட்டிலும் இருக்கும் மடங்கள். இங்கேதான் பேய்க் கலியாணம் நடக்கப்போகிறது. வைகாசி அந்த நாள். நடுச்சாமம். கலியாண முகூர்த்தநாள் அதுதான். பந்தல் சோடனை நடக்கிறது:

''பலபாடைத் துகில்கொண்டு பந்தருமே போட்டு
பன்றிமல நீர்கொண்டு பலமாக மெழுகி
களமேகிக் கையென்பு காலென்பு கோத்துக்
கட்டியதைப் பந்தரிலே தோரணமாய் விட்டார்''

பேய்கள் கட்டிய பந்தலைப் பார்த்தீர்களா? ''பாழ்ங்கிணறு பலவெடுத்துப் பாத்திரங்களாகப் பலகாரஞ் செய்தனவாம் அவை. சிறுபிள்ளைப் பிணத்தாலே சிலேப்பிவடை செய்தன'' என்கிறார் கவிஞர். சிலேப்பிவடை மாத்திரமா? எதத்னையோ பலகாரங்கள்! சோறு கறிவகைகள்! வாசிக்க நாக்கில்

நீரூறவில்லை. நரம்புகளும் எலும்புகளுமாய் நாறுகின்றன. கவிஞரின் வர்ணனையைக்கண்டு வியக்கிறோம்!

இதோ! மாப்பிள்ளை வருகிறார். மாப்பிள்ளையின் பெயர் எறிமாடன். பெண்பிள்ளையின் பெயர் அவப்பிட்டிக்கொத்தி.

''கானநரி கூகையது கடிமுரச மெழுப்ப
கரையோரப் பாவாடை கவிஞறு விரிப்ப
மாநகரின் மணிக்கூட்டு மாடம் போலோங்கி
வந்தஎறி மாடனெனும் மாப்பிளையைப் பாரீர்''

கவிஞர் பாடியுள்ள பதினைந்து பாடல்களிலே இந்த மாப்பிள்ளை வருணனை நான்கு பாடல். மிக அழகான வர்ணனைப் பாடல்கள். ''இரு பனையின் சிரமேலே ஏற்றிய கற்பாறை எழுந்திடுமே யதன்மேலும் இன்னு மொருபாறை'' அவர் உடம்பின் உயரம் அவ்வளவு. கைகள் ''இருகையும் வளர் தெங்கின் ஏய்ப்புடையதாகும்'' இப்படிப்பட்ட எறிமாடன் வருகைபுரிந்து 'கோவணத்தோ டுட்கார்ந்தார் குருக்களுக்கு முன்னால்'. இந்தப் பதினைந்து பாடல்களுக்கிடையில் மின் வெட்டுப்போல ஒருகாட்சியை - ஒரு பாடலை புகுத்திக் கவிஞர் உயர்ந்து நிற்கிறார். முன் வாயிற் பல் நிரையில் மூன்று பல்லில்லாதவனும் முக்கோணச் சொண்டுள்ளவனுமான எறிமாடனை மணக்க அவப்பிட்டிக் கொத்திக்கு மனமில்லையாம். பேய்களென்றாலும் மனித மனம் படைத்தவைதாமோ என்னவோ? பெண்ணை வலோற்காரமாக இழுத்துக்கொண்டு வருகிறார்கள். தாலி கட்டும் வைபவம் நடக்கிறது.

''நாமூன்று வடிகொண்ட நாகத்தைத் தேடி
நன்மண்டை யோடொன்று நற்றாலி யாக
வால்கொண்டு நாகத்தின் வாய்க்குள்ளே சொருகி
வளர்நாக தாலியதைக் கட்டினரே வாழ''


பேய்க் கலியாணம் அருமையாக முடிகிறது.

இந்த அருமையான பேய்க் கலியாணத்தைப் பாடியவர் நவாலியூர் க. சொக்கநாதன் என்னும் கவிஞராவர். 'மாத்தளை முத்துமாரியம்மன் குறவஞ்சி' என்ற நல்ல நூலையும் 'சிட்டுக் குருவி' என்ற கவிதைத் தொகுதியில் சில பாடல்களையும் தந்தவர். சிட்டுக்குருவித் தொகுதியில் உள்ள பாடல்தான் இது!

# இக்கால அருணகிரி

கவிஞர் வி. கந்தவனம், தலைவர், யாழ். இலக்கிய வட்டம்.

**சா**வகச்சேரி 'தொட்டனைத் தூறும் மணற்கேணி'ப் பேரூர்தான். ஆனால் தொடாமலேயே ஊறும் கவிக் கேணிகளுக்கும் அது பெயர்பெற்றது. ஊர் மண் என்றும் வெள்ளையேயாயினும் மக்கள் தலைமயிர் என்றும் கறுப்புத்தான். இடைநடுவிலோ வயதுவந்த காலத்தோ சாவகச்சேரி மக்களுக்குத் தலை பெரிதும் நரைப்பதில்லை. காரணம் ஆன்று அவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோர் வாழும் சிறப்புடையது அது.



இராமநாத மான்மியம், அருணாசல மான்மியம் ஆகிய இரு 'இனிக்கும் இலக்கியங்'களை இயற்றிய பொன்னம்பலம்பிள்ளை, நம் கண்ணெதிரில் வாழ்ந்துவருகின்ற தக்ஷகாண்டத்துக்கு உரைகண்ட பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை ஆகிய பெரியார்களும் மற்றும் அறிஞர்களும் சாவகச்சேரியின் தவப் புதல்வர்களுக்குச் சான்றாவர்.

இத்தகைய சான்றோர் மண்ணின் ஒரு பகுதியாகிய கச்சாயூரிற் பிறந்து வளர்ந்து கவி மழை பொழிந்துகொண்டிருக்கின்ற சந்தக் கவிமணி சி. சின்னையா அவர்களின் சிறப்பை இன்று அறியாதாரில்லை. எங்கள் கதிர்காமம், கதிரைமலைக்கோவை, தமிழ்மொழி யாராய்ச்சி இலக்கியம் முதலியன இவரது பெருங்கவிதை நூல்கள். இந் நூல்கள் புலவர் அவர்களின் பத்திப் பாங்கையும் தமிழ்ப் பற்றையும் எடுத்துக்காட்டுகின்றன.

நிர்வாகச் சீர்கேட்டால் கதிர்காமத்திற் சமயப் பண்பாடுகள் தவறடைவதைப் புலவர் நேரிற்கண்டும் பிறர் நொந்து கூறக்கேட்டும் மனம் கலங்குகின்றார்; கலங்கி முருகப் பெருமானை எண்ணிஎண்ணி உருகுகின்றார்; உருகிப்

பாடுகின்றார். கதிர்காமம், சைவமக்களின் நிர்வாகத்துக் குட்பட்டுப் பண்பும் கலாச்சாரமும் வளரவேண்டுமென் பதே 'எங்கள் கதிர்காமம்' என்னுங் கவிதைகளிற் பொதிந்த கருத்துக்களாகும். எடுத்துக்காட்டுக்கு ஒன்று:

சமய நித்திய கரும மற்றனர்
தயவு மற்றனர் சுயநலம்
அமைய வுற்றனர் சுருதி சொற்றிடு
மவையை விட்டனர் முதியவர்
எமைநி கர்த்தில ரவர்க ளுக்கெவை
தெரியு மிப்புது முறையெனத்
தமைம தித்தன ரிறைய ருட்பெறு
தகவு மற்றனர் குமரரே.

கச்சாயூர்ப் புலவரவர்களது 'கதிரைமலைக் கோவை' மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய திருச்சிற்றம்பலக் கோவையைப் பின்பற்றி அகப்பொருட்டுறைகளை அமைத்து இயற்றப்பட்டது. இக் கோவைக்கு அளித்த முன்னுரையில் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் 'திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை போன்ற அமரகம் பர்கள் செய்துமுடிக்கவேண்டியதொரு பணியை நமது கச் சாயூர்ப் புலவர் அவர்கள் செய்து நம் நாட்டுக்குப் புகழ் ஈட்டியிருக்கிறார்கள்' என்று கூறியிருப்பதிலிருந்து புலவர் அவர்களின் பெருமையை நன்கு அறியலாம். இந் நூல் சாகித்திய மண்டலப் பரிசுபெற்றது.

புலவர் அவர்களுடைய 'தமிழ்மொழி யாராய்ச்சி இலக்கியம்' என்னும் நூல் அவரது அகன்ற அறி வையும் ஆராய்ச்சித் திறனையும் எடுத்துக்காட்டுகின்றது.

கதிர்காம-பிரபந்தம், திருமலை யாத்திரை ஆகியன இவரது பிற நூல்கள்.

சந்தக்கவிமணி, செந்தமிழ்ப் புலவர், கலித்துறையரசு கோவைகிழார் என்றெல்லாம் போற்றப்படுகின்ற சின்னை யாப் புலவர் அவர்கள் இக்கால அருணகிரிநாதர் என்ப தனை அவரது பாக்கள் படித்துணர்ந்த யாவரும் ஒப்புக் கொள்வர். அவரது பக்திப் பாடல்கள் தூய்மையானவை; உருகும் உள்ளத்தில் முருகன் அருளாலே பெருகிப் பிறந் தவை. ஆதலாற் கோயில்களிலே பாடிப் பரவும் தகைமை யுடையவை.

இத்துணைச் சிறந்த புலவரை அவர் பிறந்த சாவகச்சேரியில் நடக்கும் யாழ். இலக்கிய வட்டத்தின் மூன்ருவது ஆண்டுவிழாவிற் பாராட்டிக் கௌரவிப்பதில் நாம் உண்மையிலேயே பெருமைப்படுகின்ருேம்!

***

# தாயும் சேய்களும்

இ. என். ராசா

ஒரு தாய்க்கு இரண்டு மைந்தர்கள் வெளியூரில் வேலை பார்க்கிருர்கள். இருவரும் ஒருநாள் தாயிடம் வருகிருர்கள். தம்பி மிகவும் நாகரீகமாக உடையணிந்து காணப்படுகிருன். அண்ணன் அழுக்குப் படிந்த உடை தரித்திருக்கின்ருன். தம்பி உத்தியோகம் பார்ப்பவன். அண்ணன் கூலி வேலை செய்பவன். இதன் காரணமாக இருவரின் உடையிலும் இந்த மாறுதல் ஏற்பட்டிருக்கிறது.

வீட்டின் உள்ளே போனதும் அண்ணன் உயரமான இடத்திலும் தம்பி நிலத்திலும் இருக்கின்றனர். ஆடையின் எளிமையையும், ஆசனத்தின் பணிவையும் காரணமாகக் கொண்டு தாயின் அன்பைப் பெற்றுவிடலாம் என்பது அவர்கள் இருவரினதும் பெருமிதமான எண்ணம். அவர்கள் ஒரு தாய் வயிற்றுக் குழந்தைகளாக இருந்தாலும் ஒருவர்மேல் ஒருவருக்குப் பொருமையாக இருக்கிறது. இருவரினதுங் குரலைக் கேட்டு உள்ளேயிருந்த தாயார் வெளியே வருகிருள். இருவரையும் அவள் ஒரே மாதிரியாகத்தான் வரவேற்கிருள். இருவரையும் ஈன்றவள் அவள் ஒருத்திதானே. அவள் எப்படி வேற்றுமை காட்டுவாள்? இருவரும் நாடிவந்த உதவியைச் செய்து அனுப்புகிருள். ஆனல், அவர்களைத் தன்னுடன் சேர்த்து வைத்து ஆதரவளிக்க அந்தத் தாய் மனம் அன்புகொள்ளவில்லை.

பிள்ளைகளின் உள்ளம் தாய்க்குத் தெரியாதா என்ன? அவர்கள் நாடிவந்தது பொருள் உதவியேயன்றித் தாயின் அன்பையல்ல! அதனல் அவர்கள் காரியம் முடிந்ததும் வெளியேறுகிருர்கள். இந்தப் பரந்த உலகத்தில் தாயாகிய இறைவனுற் படைக்கப்பட்ட நாம் அனைவரும் அண்ணன் தம்பி என்பதை மறுக்க முடியாது. எந்தச் சாதியாயிருந்தாலும் நமக்குந் தாய் இறைவன் ஒருவன்தான். அவன் வேற்றுமை காட்டுவதேயில்லை. நம் உள்ளத்திலே உண்மையான அன்பிருந்தால் ஆண்டவனிடத்திலே நமக்கு நிரந்தரமான இடமுண்டு. அதுவன்றி, அவன் ஆதரவைப்பெற முடியுமேயல்லாமல் அன்பைப் பெற முடியாது.

மனம் ஒத்துழைக்காத எளிமையில் தாயின் அன்பைப் பெற மாட்டோம். உயர்ந்த சாதி என எண்ணிக்கொண்ட அண்ணன் உடையில் எளிமையை வைத்துக்கொண்டு உள்ளத்தில் உயர்ந்தவன் என்ற பெருமிதம் பெற்றிருத்தல் கூடாது. அதேபோற் தம்பியின் செய்கையிற் தாழ்மையிருந்தாலும் தான் என்ற ஆடம்பர எண்ணம் இருந்தால் அது தவறல்லவா? மனத்தின் உயர்வே மகான் காந்தியின் வாழ்க்கைக்கும் உயர்வாயிற்று. ஆண்டவனுக்காக நாம் வாழவேண்டும். எங்களுக்காக ஆண்டவன் வாழவில்லை என்பதை இருசாராரும் எண்ணினுல் நாட்டில் சாதிச் சண்டைகள் ஏன் ஏற்படப்போகின்றன. இருவகையினரதும் அறியாமையே ஒரு தாய் பிள்ளைகள் என்பதை மறக்கச் செய்துவிடுகின்றது.

ஒரு வீட்டிற்குப் பல வாசல்கள் இருந்தாலும் நாங்கள் நினைக்கும் ஒரே வாசலாலேதான் போகவேண்டும் என்று ஒரு சாராரின் பிடிவாதமும் அப்படிப் போகக்கூடாது என ஒரு சாராரின் முரண்பாடான பிடிவாதமும் வீணை துன்பத்தை மூட்டி -தீமையை- மனிதவேற்றுமையை வலுப்படுத்துகின்றனவே தவிர நன்மை எதுவும் விளைவதாயில்லை. நம் பொழுதைக் கடந்து செல்லும் ஒவ்வொரு மணித்தியாலங்களும் சும்மா விளையாட்டாக ஓடவில்லை. நம்முடைய வயதையும் கூட்டிக்கொண்டே ஓடுகின்றன. நாட்கள் ஓடஓட வயதும் முதிரும். வயது ஓட ஓட அறிவும் முதிர வேண்டும். அந்த அறிவு பயன்படாத முற்றிய முருங்கைக்காயைப் போன்று இருக்கக் கூடாது. சிறு குழந்தையாக இருக்கும்போது தாய்க்குப் பதிலாக அவள் புகைப்படத்தைக் காட்டி ஏமாற்றியிருக்கலாம். வளர்ந்த பின்னும் அந்த ஏமாற்றுக்கு இடம் கொடுக்கலாமா?

செய் தொழிலைக்கொண்டு சாதிகள் பிரிக்கப்பட்டன என்பதைப் படிப்பளவில் எண்ணுமல் 'சாதிகள் இல்லையடி பாப்பா' என்ற பாரதியின் வழிநிற்க நாம் ஏன் துணியக்கூடாது. அன்பு என்பது ஆழ்கடல்; அங்கே வேற்றுமையில்லை; அங்கே தூற்றலுமில்லை. அன்பு எங்கே பர்ணமிக்கிறதோ அவருக்கு நம் எலும்பையும் சொந்தமாக்க நாம் ஏன் தயங்கவேண்டும்? 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்ற தத்துவத்தை நம் மனப்பொறியிலே அடைத்து அன்பு ரீதியில் உயர்ந்தவன் – தாழ்ந்தவன் – படித்தவன்- பாமரன் என்ற வேற்றுமை இருளை அகற்றி உலகம் உய்ய ஆண்டவனை வணங்குவோமாக!

## அட்டைப் படம்

சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் 30-4-69 இல் யாழ். இலக்கிய வட்டத்தினர் தமது மூன்றுவது ஆண்டு நிறைவு விழாவின்போது கச்சாயூர் சந்தக் கவிமணி சி. சின்னையாப் புலவர் அவர்களுக்கு விருது வளங்கிக் கௌரவிக்கிருர்கள்.

தொடர்ச்சி: விஞ்ஞானம்

# நீங்களும் அறிந்திருக்க வேண்டும்!

செல்வி ந. சரோஜா

பிள்ளைகளே! உங்கள் வயதைப் பிறந்த திகதியைக் கொண்டு கணிக்கிறீர்கள். அப்போ தாவரங்களின் வயதைக் கணிப்பதெப்படி? ஒரு முதிர்ந்த மரத்தைக் குறுக்கே வெட்டுங்கள். பல வளையங்களைக் காண்பீர்கள். இவை ஆண்டு வளையம் எனப்படும். ஒவ்வோர் வளையமும் ஓராண்டு வளர்ச்சியைக் குறிக்கும் இவற்றை எண்ணி அம் மரத்தின் வயதைக் கணக்கிடுங்கள்.

நீங்கள் காய்ச்சலாக இருக்கும்போது நெற்றியில் 'ஒடிக்குலோன்' போடுகிறீர்கள். எதற்காக? ஓடிக்குலோன் உடலைக் குளிர்ச்சியாக்குவதை உணர்ந்திருப்பீர்கள். இல்லையா? இதற்குக் காரணம் ஓடிக்குலோன், பெற்ரோல், மதுசாரம்போன்ற திரவங்கள் எளிதில் ஆவியாவன. இவை எமது உடலிலுள்ள வெப்பத்தை உறிஞ்சியே ஆவியாகின்றன. அப்போ எங்கள் உடல் வெப்பநிலை குறைந்து குளிர்ச்சியடைகின்றது.

வால்வெள்ளியைப் பற்றிக் கேள்விப்பட்டிருபீர்கள். கண்டிருக்கமாட்டீர்களென நம்புகிறேன். அது என்ன தெரியுமா? வானில் தெரியும் நட்சத்திரங்களில் அதுவும் ஒன்று. அதன் தலை நாமிருக்கும் பூமியிலும் பெரியது. நீண்டவால் கொண்டது. சூரியனைச் சுற்றி வலம் வந்து கொண்டிருக்கும். பூமிக்குக் கிட்டவரும் வால்வெள்ளிதான் எமக்குப் புலப்படும். அதன் வால் புவியைத் தாக்கினல் என்ன நடக்கும் தெரியுமா? புவி எரிந்தேவிடும்.

ஒரு கோழி முட்டையை உப்புநீரில் வைத்தால் என்ன செய்யுமென்று நினைக்கிறீர்கள்? நீங்கள் வைத்த இடத்திலேயே நிற்கும். இதற்குக் காரணம் உப்பு நீரினதும் முட்டையினதும் அடர்த்தி ஒன்ருக இருப்பதே. சுலபமாக நீந்துவதற்கு எதைநோக்கிச் செல்வீர்கள்? ஆற்றையா? கடலையா? கடலில் நீந்திப்பாருங்கள் ஆற்றிலும் சுலபமாக இருக்கும். காரணம் கடல் நீரின் அடர்த்தி ஆற்று நீரிலும் கூடியதாகையால் அதன் மேலுதைப்புக்கூட. மிகச் சுலபமாக நீந்தமுடிகிறது. ஒரு பொருளினதும் திரவத்தினதும் அடர்த்தி ஒன்ருக இருந்தால் பொருள் திரவத்தில் இட்ட இடத்தில் இருக்கும். பொருளினது அடர்த்தி திரவத்தினது அடர்த்தியிலும் குறைந்தால் அப் பொருள் மிதக்கும். கூடினல் அத் திரவத்தினுள் மூழ்கிவிடும்.

# நிலா நிலா ஓடி வா!

த. அரியரத்தினம் B. Sc. (Dip. in Ed.)

ஆம், மனிதனுல் இந்த முட்டுக்கட்டைகளையெல்லாம் மீற முடிந்ததா? ஒருவர் அல்லப் பலர் விண்ணிலே பறந்தார்கள். முதன் முதல் விண்ணை வலம் வந்த மாவீரன் இரசிய நாட்டு யூறிககாரின் ஆகும். விஞ்ஞானத்தின் வளர்ச்சிக்குப் பெருமை தேடி, கவிஞரின் கற்பனையை உண்மையாக்கி, மனிதனின் கனவை நனவாக்கித் தன் நாட்டுக்கும், தனக்கும் பெருமை தேடும் அரிய சாதனையை நிலை நாட்டினுர். மனிதனில் தேவனுகிய இவரை மக்கள் காண விழைந்தனர். பல நாடுகளுக்கும் இவர் சென்றுர். இவரைப் பார்க்கவும், இவர் அனுபவத்தைக் கேட்கவும் இலங்கை மக்களாகிய எமக்கும் ஒரு வாய்ப்புக் கிடைத்தது. விண்ணையே வெற்றி கொண்ட இந்த மாவீரன் இன்று நம்மோடில்லை. விண்ணிலே வெற்றியோடு பறந்த அவர் சாதாரண விபத்தொன்றில் இறந்துவிட்டார்.

இவர் செய்த பணியை தொடர்ந்து பலர் செய்தனர். இரசியர்களும், அமெரிக்கர்களும் மாறி மாறி விண் வெளிக்கு மனிதனை அனுப்பிக்கொண்டேயிருந்தனர். விண்பற்றிய செய்திகளையும், விண்ணில் பறக்கும் மனிதன் உடலில் ஏற்படும் மாற்றங்கள் பற்றியும் நன்ருக ஆராய்ந்தனர். இந்த ஆராய்ச்சியின் முடிவுகள் அவர்களுக்கு மேலும் மேலும் ஆர்வத்தைக் கொடுத்தன. இன்னும் ஓரிரண்டு ஆண்டுகளில் மனிதனைச் சந்திரனில் இறக்கியே தீருவோம் என்று உறுதி கொண்டார்கள். தொடர்ந்து பயிற்சி வளர்ந்தது. விஞ்ஞான ஆற்றல் பிரமாண்டமான ஏவுகணைகள் மிகப் பெரிய கப்பல்கள் தயாராகின. அமெரிக்கர் அப்போலோ என்று பெயரிட்ட பல விண்வெளிக்கப்பல்கள் விண்ணில் பறந்து வந்தன.

அத்தகைய கப்பல்களுள் சந்திரனை வலம் வந்த ''அப்போலோ - 8'' செய்த பயணம்பற்றி நாம் இப்போது பார்ப்போம். கடந்த ஆண்டின் இறுதியில் இது மேலே அனுப்பப்பட்டது. நன்கு பயிற்றப்பட்ட மூவர் இந்தக் கப்பலில் இருந்தனர். விண்வெளிக்கப்பலில் பறக்கும் வீரர்களுக்கும் நிலத்திலிருந்து அவர்களை ஆட்டிவைக்கும் சூத்திரகாரிகளான விஞ்ஞானிகளுக்கும் தொடர்பு இருந்துகொண்டேயிருக்கும். அதேபோல அப்போலோ-8ல் இருந்தவர்கள் கீழே தொடர்பு கொண்டிருந்தார்கள். வாயு வேகம் மனே வேகம் என்பார்களே. அந்த வேகத்தில் அப்போலோ-8 விண்ணை அடைந்தது. விண்ணைப் பலமுறை வலம் வந்தது. பல தகவல்களை தொலைக் காட்சிமூலம் கீழே அனுப்பி வைத்தது. விண்ணை வலம் வந்து சந்திரனை நோக்கிப் பயணமாக வேண்டிய நேரம் நெருங்கியது. கீழேயிருந்து கட்டளை விடுக்கப்பட்டதும் அப்போலோ - 8ன் பாதை திசை திரும்பியது. அமெரிக்கர்

தொலைக் காட்சியின்மூலம் இதனைப் பார்த்தனர். உலகத்தினர் வானொலி மூலமும், பத்திரிகைகளின் மூலமும் நடப்பவற்றை அறிந்து கொண்டனர்.

சந்திரனை நோக்கிச் செல்லும் அப்போலோ - 8 சந்திரனிலிருந்து எழுபது மைல் தொலைவில்தான் வலம்வர வேண்டும் என்று நிர்ணய மாகியிருந்தது. ஆனால் கப்பல் அந்த எல்லையைத் தாண்டிச் சென்று விட்டது. உலகெங்கும் பரபரப்பு. என்ன ஆகுமோ, ஏதோ என்று நாம் எல்லாம் ஏங்கி நிற்க கீழேயுள்ள விஞ்ஞானிகள் செய்திகளை மேலே அனுப்ப சந்திரனின் ஈர்ப்பு விசையால் இழுபட்டு சந்திரனில் போய் மோதி விடுமோ என்ற பயம் பறந்து செல்ல அப்போலோ - 8 சந்திரனை வலம்வர ஆரம்பித்தது. மனிதன் தன் வாழ் நாளிலேயே கண்டிராத காட்சியை, சந்திரனின் இருண்ட பகுதியை கப்பல் அடைந்தது. பல வினாடிகளுக்கு கப்பலுக்கும் கீழுள்ளவர்களுக்கும் இடையே உள்ள தொடர்பு துண்டிக்கப்பட்டது. காரணம் தெரியவில்லை. கப்பல் சந்திரனின் ஈர்ப்பு விசையை மீறி மேலே போய்க்கொண்டிருக்குமோ என எண்ணலாயினர். இந்த சந்தேகம் நீடித்திருக்கவில்லை. வெற்றி வெற்றி என்ற குரல் கேட்டது. இருண்ட பகுதியைவிட்டு கப்பல் வந்து கொண்டிருந்தது. நினைத்தது நடந்துவிட்டது. மனிதனால் ஆகாதது ஒன்றுமேயில்லை என்பது உறுதியாகிவிட்டது. அமெரிக்க மக்கள் தம் நாட்டை, ஏன் மனித இனத்தையே பெருமைப்படச் செய்துவிட்டார்கள். இவர்கள் சந்திரனை வலம் வந்த காலத்தில் பூமியைப் பல கோணங்களில் இருந்து படம் எடுத்துத் தொலைக் காட்சி மூலம் அனுப்பியிருந்தார்கள்.

பூமி உருண்டை என்று நீங்கள் படித்திருப்பீர்கள். இந்தக் கொள்கையை எதிர்க்கும் பல பெரிய விஞ்ஞானிகள்கூட இருக்கின்றார்கள் என்பது உங்களுக்குத் தெரியுமா? ஒரு சாரார் பூமி தட்டையானதென்றும் சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள். அப்போலோ - 8 அனுப்பிய படத்தில் பூமி ஒரு பந்துபோன்ற வடிவில் பாதி இருள் சூழ்ந்திருக்கப் பார்க்க முடிந்தது. இனியாவது பூமி உருண்டைதான் என்பதை அந்த அறிஞர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என எதிர்பார்ப்போம்.

அப்போலோ - 8ம் அதன் பிரயாணிகளும் தம் கடமையை முடித்துக் கொண்டு பொன்னான பூமியை நோக்கித் திரும்பினார்கள். அவர்கள் வந்திறங்கிய தினம் நத்தார் தினமாகும். விண்வெளிக் கப்பலில் இருந்துகொண்டே அமெரிக்க மக்களுக்கும், உலக மக்களுக்கும் நத்தார் வாழ்த்தை அனுப்பினார்கள். இனி அடுத்துச்செய்வதென்ன. நிலவில் இறங்கவேண்டியதுதானே. அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி விஞ்ஞானிகளின் திட்டப்படி அப்போலோ - 11 வரை ஆராய்ச்சி நடந்து அப்போலோ - 11ல் செல்பவர்கள் முதன் முதல் சந்திரனில் இறங்குவார்களாம். அப்போலோ - 9 செய்தது என்ன? அதன் ஆராய்ச்சிகள்

நிலவுப் பாதையை நோக்கி மனிதனை முன்னேறச் செய்யுமா? என்பதைப்பற்றி அடுத்த இதழில் பார்ப்போம். நீங்கள் பொறுமையுள்ளவர்களாகவும், அதிர்ஸ்டசாலிகளாகவும் இருந்தால் இரவில் அமைதியாக நிர்மலமான ஆகாயத்தை அண்ணார்ந்து பார்த்துக்கொண்டிருப்பீர்களானல் புழுக்கமும் குறைவாக இருக்கவும், எண்ணிறந்த கோள்கள் நட்சத்திர வடிவில் வேகமாக ஓடிக்கொண்டிருப்பதையும் பார்க்கலாம். — தொடரும்

* *

# ஆஸ்திகம்

— சந்தக்கவிமணி சி. சின்னையா —

**சா**தாரணமாக ஒருவருக்கு ஒரு தினத்தில் எண்பத்தாருயிரத்தறுநூறு அங்குலச் சுவாசங் கழிந்துபோகின்றது.

அதனுலேதான் ஆயுள் குறைகின்றது.

ஆசிரியர்கள், பேச்சாளர்கள், உடலுழைப்பாளர்கள் ஆதியோர்களுக்குச் சுவாசம் இன்னுங் கூடிய விகிதங் கழியும்.

சுவாசங் கழிகின்ற இடை, பிங்கலை நாடிகளால் சுவாசங் கழிவதை நிறுத்திச் சுழிமுனை நாடிவழியாகச் சுவாசத்தைச் செலுத்திறைல் ஆயுள் விரயமாகாது.

அது குரு முகமாகப் பயிற்சிபெறவேண்டிய வித்தை. அதுவே யோகபாத அனுட்டானமென்பது.

அந்த யோக நிலை கைகூடப்பெற்றவர்கள் பல ஆயிரம் வருசங்கள் உயிர்வாழ்வார்கள். திருமூலநாயனர் அவர்களிலொருவர்.

அவர்கள் சித்துப் பிரபஞ்சத்தை ஆராய்பவர்கள். அவர்கள் சூக்கும தேகத்துடன் தூல தேகத்துக்கு வெளியே சஞ்சரித்தவர்கள்.

பூமண்டலமல்லாத வேறு மண்டலங்களுக்கும் போய் அவற்றின் இயல்புகளை நன்கு தெரிந்தவர்கள்.

தெரிந்துதான் இன்ன கிரகம் இன்ன காரகன் என்று வரையறை செய்தவர்கள்.

அந்த வரையறைப்படி ஒவ்வொரு காரகனும் தனது காரகத்துக்குரிய பலனைச் செய்துகொண்டிருப்பதைப் பிரத்தியக்ஷமாக எவர்களுமறியக் கூடியதாகவிருக்கின்றது.

பிரபஞ்சத்துக்குக் கருத்தா ஒருவர் உளர் என்று அறிந்தவர்களும் அந்த யோகிகள்தான்.

தன்னினமாகிய பசுக்களையும், பிரபஞ்ச காரணரான பதியையும், பசுக்கள் பதியையடைதற்குத் தடையாயிருக்கின்ற பாசங்களையும் நன்கு தெரிந்து திரிபதார்த்தலக்ஷணம் என்கின்ற சாத்திரத்தை ஆக்கியவர்களும் குறிப்பிட்ட யோகிகளும், ஞானிகளுந்தான்.

ஞானம் யோகத்துக்கு அடுத்த மேற்படி.

இந்தச் சாத்திரத்தையும், இதற்கனுகூலமான வேறு நூல்களையும் படித்தறிந்து ஒழுகுபவர்கள் கடவுளையும், மறுபிறப்பையும், நல்வினை. தீவினைகளையும், சுவர்க்க நரகங்களையும் உட்பொருளென நம்புகின்ற ஆஸ்திகர்களெனச் சொல்லப்பெறுவார்கள்.

ஆஸ்திகர்கள்தான் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பவைகளைப் படிமுறையாக அனுட்டித்து ஞானபாதத்தினின்று அத்துவித முத்திப்பேறடைந்தவர்கள்.

திருவாசகம் பாடியருளிய மாணிக்கவாசக சுவாமிகள் அத்துவித முத்திப் பேறடைந்தவர்களுளொருவர்.

இந்த ஆஸ்திகர்கள் பிரமாணமாகக் கொள்ளுகின்ற சுருதிகளை ஏற்றுக்கொள்ளாமல் காட்சிப் பிரமாணத்தை மாத்திரம் ஒப்புக்கொள்ளுசின்ற ஒருசாரார் தற்காலந் தலைதூக்கியுள்ளார்கள்.

அவர்கள்தான் நாஸ்திகர்கள்.

நாஸ்திகர்கள் காட்சியை மாத்திரமே பிரமாணமாகக் கொள்பவர்களானாலும்,

உதாரணத்துக்கு ஒரு கதை:

முருகுப்பிள்ளை ஒரு நாஸ்திகன்.
முருகுப்பிள்ளைக்குத் தகப்பன் சங்கரப்பிள்ளை.
சங்கரப்பிள்ளைதான் தனக்குத் தகப்பன் என்பதை முருகுப்பிள்ளை ஒருபோதுங் காணவில்லை.

காணவிட்டாலும் ச. முருகுப்பிள்ளை என்று ஒப்பமிடுவது மாத்திரம் தவறில்லை.

முருகுப்பிள்ளை செய்வது சரியோ என்பதை வாசகர்களே சிந்தித்துத் தீர்ப்புக் கூறுங்கள்!

வணக்கம்

**

# ஜீவகாருண்யம் (42)

— மு. க. சுப்பிரமணியம் —

**மோ**கன் குறிதப்பாது சுடக்கூடியவன். ஓய்வு நேரங்களில் தன் துவக்கையும் எடுத்துக்கொண்டு தன் கூட்டாளிகளுடன் காட்டுப்பக்கம் வேட்டைக்குப் போவான். ஒருநாள் காடு முழுவதும் திரிந்தும் மிருகங்களோ பறவைகளோ அவன் இலக்குக்கு அகப்படவில்லை. களைத்த நிலையில் ஒரு மரத்தடியில் உட்கார்ந்தான்.

தூரத்தில் ஏதோ வருவதைக் கண்டான். கூர்ந்துபார்த்தான். ஒரு மான் தன்குட்டியுடன் வருவதைக் கண்டான். உடனே துவக்கை நீட்டிக் குறிவைத்துச் சுட்டான். மான் சிறிது தூரம் ஓடிச்சென்று விழுந்துபுரண்டது. குட்டியோ நடக்கமுடியாது காலைத் தூக்கியபடி தன் தாய்க்குப் பின்னுல் ஓட முயற்சித்தது.

மோகன் போய்ப் பார்த்தான். மான் இறந்துகிடந்தது. குட்டி நடக்கமுடியாது காலில் சன்னம் பட்டுக்கிடந்தது. நண்பர்கள் மானைத் தூக்க மோகன் குட்டியைத் தூக்கிக்கொண்டு சென்றுன். செல்லும்வழியால் ஒரு முதியவர் வந்தார். மானையும் குட்டியையும் கண்டதும் ''இதென்னப்பா! உங்களுக்கு ஏன் இந்த வேலை? ஐயோ தாய் இறந்துவிட்டது. குட்டி உயிருக்குப் போராடுகிறது; எவ்வளவு ஆனந்தமாகத் தன் தாயுடன் துள்ளிவிளையாடும் குட்டியைத் துயரத்துக்குள்ளாக்கிவிட்டீர்கள். உங்கள் தாய்மார் இறந்துவிட்டால் நீங்கள் கவலைப்படமாட்டீர்களா? உங்களுக்கு யார் உதவி செய்வார்கள்? உங்கள் உடம்பை வளர்ப்பதற்காக இப்படி இரக்கமற்ற செயல்களைச் செய்வதா? இந்தக் குட்டியை என்னிடம் தாருங்கள் இதன் உயிரை யான் காப்பாற்றவேண்டும்'' என்று அழுதவண்ணம் கூறினர். மோகனின் மனமும் இரக்கமடைந்தது. மான் குட்டியை முதியவரிடம் ஒப்படைத்தான். முதியவரின் அறிவுரையைக் கேட்ட மோகன் உயிர்களுக்குத் தீங்கு செய்வதில்லையென உறுதி பூண்டான்.

''உயிர்களிடத்து அன்பு வேண்டும் — தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேண்டும்''

★

## வாழ்க மணமக்கள்!

மிருசுவிலைச் சேர்ந்த செல்வி இராஜேஸ்வரி ஆறுமுகம்
'வெற்றிமணி' ஆதரவாளர்களில் ஒருவர்.
அவரது திருமணம் 12-5-69ல் இனிது நடைபெற்றது.

**வாழ்க**

இராஜேஸ்வரி — கனகசிங்கம்
தம்பதிகள்.

— ஆசிரியர்




கவிஞர் மு. க. சூரியன், மகா வித்தியாலயம் ,வ / புதுக்குடியிருப்பு.

வெண்பா

வெற்றிமணி ஆசிரிய! வீசு மு. க. சுப்ரமண்ய
வெற்றிமணி 'மே'யிதழை வேண்டுகின்றேன் - பொற்புநிறை
வெற்றிமணி 'மே'யிதழை வேளைக்கே எற்கனுப்பி
வெற்றிமணி மிக்கொலிக்க வேண்டு!

கே. எம். பாறூக்,
பதியதளாவ.

அன்புள்ள ஆசிரியருக்கு:

வெற்றிமணி பத்திரிகை பற்றி யான் முன்னர் அறியவில்லை. சகோதரி செல்வி ப. தேனுமிர்தம் ஒரு பிரதியை அனுப்பிச் சந்தாதாரராகச் சேரும்படி அறிவித்தார்: இத்துடன் சந்தா ரூபா 4 அனுப்புகின்றேன். நான் சிறுவயதிலிருந்தே எழுத்துலகில் ஆர்வமுடையேன். தினகரனிலும் மற்றும் பத்திரிகைகளிலும் என் கட்டுரைகள் வெளிவந்துள்ளன. வெற்றிமணிக்கு எனது படைப்புகளை அனுப்புவதற்கு இப்போ வாய்ப்புக் கிடைத்துள்ளது. வெற்றிமணி மென்மேலும் சிறப்புடனும் புதிய அம்சங்களுடனும் வெளிவரவேண்டும் என விரும்புகின்றேன்.

சி. மருதைராஜ்
அட்டன்.

அன்பிற்குரிய ஆசிரியருக்கு!

வெற்றிமணிப் பிரதி செல்வி பவளமலர் தேனுமிர்தம் மூலம் கிடைத்தது. சிறந்த விஷயங்கள் அடங்கிய பத்திரிகை. இதனுல், கல்வி கற்கும் எதிர்காலச் சிறுர்கள் சிறந்த பயனை அடைவார் என்ற நம்பிக்கை எனக்குண்டு மலை நாட்டில் வெற்றிமணி இன்னும் அறிமுகமாகவில்லை எனத் தெரிகிறது. மலைநாட்டில் இப்பத்திரிகைக்கு நிறைய இடம் கிடைக்க வைக்க இயன்ற உதவி செய்வேன். கூடிய கெதியில் சந்தாவை அனுப்புகிறேன்.

★★

# நாடகம்

ஏ. ரி. பொன்னுத்துரை B. A.

**வேலு :** சரி. வாருங்கோ தம்பி ஓடுவம்.

[இருவரும் வாசலடியில் போகிருர்கள். அப்போது, ''வேலு வேலு!'' என்ற சப்தம் வீட்டுக்குள்ளிருந்து கேட்கிறது]

**வேலு :** தம்பி! வேலு எண்டு ஆரோ வீட்டுக்கை கூப்பிடுகினம். ஐயாவின்ரை குரல் மாதிரிக் கிடக்கு. ஒருக்கா என்னண்டுபாத்திட்டு...

[அப்போது சிங்கப்பூர் சுப்பிரமணியம் பெரிய அறையைத் திறந்து 'ஹோலு'க்குள்ளால் வந்து விருந்தைக்கு வருகிருர்]

**சி. சுப்.:** வேலு! வேலு! இஞ்சை வாடா! இஞ்சை வாடா! எங்கை போருய் தம்பி மணி! உன்னை என்ரை சகோதரி சந்திரா என்ன தவம் செய்து பெத்தாளோ? நீ அமரிக்காப்பக்கத்திலை பிறக்கவேண்டிய ஆள். எக்கச்செக்கமாய் இஞ்சை பிறந்திட்டாய்.

நீ பேசினதுகளை யெல்லாம் உள் வீட்டுக்கை இருந்துதான் கேட்டேன். என்ரை மேளைக் கலியாணஞ் செய்து போட்டு அவளையும் ஆத்திலை சாகக் கொல்லப்போறியோ? போக்கிரி. கொழும்பிலை இதுதானே படிச்சனி. என்ரை வீடாப்போச்சு. இல்லாட்டிச் சுட்டுத் தள்ளிப்போடுவன். மரியாதையா இந்த இடத்தைவிட்டுப் போ. இல்லாட்டால் நடக்கிறது வேறை.

மணியும், யோனும் வெட்கத்துடன் காரில் ஏறிப் போகிருர்கள். சுந்தரமும் மூர்த்தியும் வயல்களைப் பார்த்துவிட்டு வருகின்றனர்.]

**இருவ :** மாமா! மாமா!!

**சுந்த :** உங்க வீடு பாத்தோம்.

**மூர்த் :** உங்க வயல் நிலம் எல்லாம் பாத்தோம் நல்லாய்ப் பிடிச்சிருக்கு.

**சுந்த :** அவவின்ரை போட்டோகூடப் பாத் தோம்.

**மூர்த் :** எனக்கு ரொம்பப் பிடிச்சிட்டுது மாமா. நீங்கள் இதுவரையும் எங்கே மாமா போயிருந்தியள்?

**சி. சுப். :** இதுவரையும் இந்த வீட்டுக்கைதான் இருந்தேன். வேலைக்காற வேலுவுக்குக் கூடத் தெரியாது. அதனுலைதான் உங் கள் இரண்டுபேரின் பேடித்தனத்தை - பயந்தாங் கொள்ளிப் போக்கை எல் லாம் கண்டுபிடிச்சேன். பேயள் பிச்சி கள் இருக்கெண்டு, மனிசன் சந்திரமண் டலம் போற இந்தக்காலத்திலை பயந்து சாகிறியளே. உங்களிட்டை என்ரை பெட்டையை எப்பிடி நம்பித் தாறது? அப்ப...

**சுந்த :** போட்டு வாறம்.

**மூர்த் :** வெற்றிகரமாகப் பின்வாங்குகிறேம்.

[போகிறுர்கள். வயல் பார்த்தபின் வில்லுப்பாட்டு வீரசிங்கம் வருகிறுர்.]

**வீர :** மாமா! மாமா! வயலெல்லாம் பார்த் தேன்.

**சி. சுப். :** (நையாண்டியாக) வயலின் அருகே வாவியும் உண்டோ?

**வீர :** ஆமாம் உண்டு. அதன் அருகேதான் அமர்வேன் என்......

**சி. சுப். :** வேலுவோடை பேசையுக்கை ஒரு வரு ஷம் அங்கொடையிலை இருந்ததெண்டு சொன்னுய்போலை கிடக்கு.

**வீர :** ஆமாம் இருந்தேன். அது யான் செய்த பெரும் பேறே.

**சி.சுப் :** உனக்கு உந்த வில்லுப் பாட்டுத்தான் தோது. உனக்கும் கலியாணத்துக்கும் எட்டாம் பொருத்தம். உம்மடை தமிழைக் கேட்டாலே அவளவை ஓட்டம் பிடிச்சிடுவளவை. அப்ப போட்டு வா தம்பி!

**வீர :** சரி நான் செல்கிறேன். கிட்டாதாயின் வெட்டென மற!

[வீரசிங்கம் செல்கிறார்]

**சி. சுப்.:** [மகேசனைப் பார்த்து] தம்பி! உந்தக் கதிரையிலே உட்கார் தம்பி. ஒருதன்ரை குணம் அவன்ரை பிறப்பைப் பொறுத்ததல்ல எண்டதை இண்டைக்குத்தான் அறிஞ்சேன். உன்னைப்பற்றிப் பிழையான அபிப்பிராயத்தோடை இருந்துவிட்டேன். ஒரு வீட்டுக்கு மருமகனாய்ப் போறதுக்குரிய சகல குணமும் உன்னட்டை இருக்கிறதை இட்டு எனக்குப் பெரிய சந்தோஷம்.

['டான்ஸ் கிளாஸ்' சென்ற லீலா காரில் இருந்து இறங்கி வருகிறாள்]

**லீலா :** (பயத்துடன்) அப்பா!

**சி. சுப்.:** பயப்படாதையம்மா. உனக்குத் தக்க மாப்பிள்ளையைத் தேர்ந்தெடுத்து விட்டேன் அம்மா. வேறு யாருமல்ல இந்த மகேசன்தான்.

**லீலா :** அப்பா உண்மையாகத்தான் கூறுகிறீர்களா? மூண்டு மணிபோலே வெறுத்துப் பேசினியளே. இப்ப ஆறு மணியாகையில்லை. அதுக்கிடையிலே என்னண்டு இந்த மனமாற்றம் வந்தது.


**சி. சுப். :** அம்மா! உனக்குத் தக்க ஆளைத் தேர்ந்தெடுக்கவேணுமெண்டு உனக்கு மச்சான் முறையான ஆட்கள் எல்லாரையும் இஞ்சை வரும்படி கடிதம் எழுதினேன். அதின்படி இண்டைக்குப் பின்னேரம் எல்லாரும் வந்தினம். ஒருத்தருக்கும் பேசாமல் பெரியறையுக்கை இருந்து அவையையப்பற்றி அவை வேலுவோடை கதைச்ச கதையளைக்கொண்டு அறிஞ்சிட்டேன். வந்தவங்களிலை வவுனியாவாலை வந்தவை பயந்தாங் கொள்ளியள். மற்றவர் ஒருத்தர் அரை 'லூஸ்'. கொழும்பாலை வந்தவர் உலகத்தை வித்த கள்ளன். நீ விரும்பிய இந்த மகேசனின் பிறப்பில் களங்கம் இருந்தாலும் உத்தமன் எண்டதை தன் செய்கையாலை நிரூபித்துக் காட்டிப்போட்டான். நாளைக்கே உங்கடை கலியாண எழுத்தை வைச்சிடுவோம். டேய் குமார்!

**குமார் :** ஐயா!

**சி. சுப். :** நான் சொன்ன திட்டப்படி சரியாவந்து எனக்கு ஆபத்து வந்ததெண்டு சொல்லியிருக்கிறாய். வா ஒரு 'ரீ' குடிச்சுக் கொண்டு போ.

**வேலு :** ஐயா! நீங்கள் சரியான ஆள்தான் ஐயா. மேடையிலைதான் ஆடுறியள்எண்டு பாத்தா இஞ்சை ஒரு பெரிய 'நாடகம்' ஆடிப்போட்டியள்.

திரை




# அம்மாவுக்கு இணை அம்மா

— செல்லத்துரை சுதாகர், வேலணை. —

எம்மைப் பெற்று வளர்ப்பவள் அம்மா. நாம் முதலில் கண்ட உலகம் அது. இந்த உலகம் பத்து மாதங்கள் சுமந்தது. எம்மைப் பெற்றது; சீராட்டிப் பாலூட்டியது. ஈ, எறும்பு, கொக்கு, குருவி பறவாமல் பாதுகாத்தது. எமக்கு நோய் வந்தபோதெல்லாம் கண்விழித்துக் காப்பவள் அம்மா. வேண்டிய பண்டங்களை எல்லாம் தேடிக் கொடுப்பவள் அம்மா. தெய்வசிந்தனை நிறைந்தவள் அம்மா.

எனக்கு அம்மா இருக்கிறாள். அதேபோல் உங்கள் எல்லோருக்கும் அம்மா இருந்தால் அதிஷ்டக்காரர்தான். ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் தேடினாலும் எம்மைப் பெற்றவள்போல் வேறுயாரையும் ஈடாகவோ இணையாகவோ தேட முடியாது. அம்மாவுக்கு இணை அம்மாதான்.

சிறுவர்களாகிய நாம் மாதாவின் சொல்லைத் தட்டாமல் நடக்கவேண்டும். அன்பு, அறிவு, ஆற்றல் உள்ளவர்களாக இருக்கப் பழகவேண்டும். பண்புள்ளவராகப் பழகவேண்டும். பெற்றோரையும், ஆசிரியரையும், பெரியோரையும் கனம்பண்ண வேண்டும். வித்தகராகவும், வீரராகவும் விளங்கவேண்டும். நன்றாகப் படிக்கவேண்டும். பட்டம் பதவி எல்லாம் பெறவேண்டும். நல்லொழுக்கமும் தெய்வசிந்தனையுமுள்ளவர்களாக வாழவேண்டும்.

தீய பழக்க வழக்கங்களை அறவே நீக்கவேண்டும். தீயவர்களுடன் சேர்ந்து பழகவே கூடாது. பொறாமை என்னும் கொடிய செயலை நீக்கவேண்டும். இவ்வளவும் செய்துவிட்டால் நல்லவர்களாகவே வாழ்ந்துவிடலாம். அப்போது

எம்மைப் பெற்றவளின் மனம் எப்படி இருக்கும் என்பதைத் திருவள்ளுவர் அழகாகப் பாடிவிட்டார்:

''ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனைச்
சான்றோன் எனக் கேட்ட தாய்''

எம்மைப் பெற்ற பொழுதிலும் பார்க்கச் சான்றோன் எனக் கேட்டபொழுது தான் பெரிதுவப்பாள் தாய். இதிலிருந்து நாம் பெரியவர்களாக வளர்ந்தால் மட்டும் போதாது. கல்வி கேள்வியில் வல்லமை யுள்ளவராக வளர்ந்து வீட்டுக்கும் நாட்டுக்கும் சேவை செய்தல் வேண்டும் என்பது உணர்த்தப்படுகின்றது. அப்பொழுதுதான் எம்மைப் பெற்ற தாய் பூரிப்படைகின்றாள். எம்மை ஈன்றெடுத்த அந்த இணையற்ற தெய்வத்தின் உள்ளம் நோகாதவாறு நாம் நடந்து கொள்ளல்வேண்டும்.

* *

## கமத் தொழில்

ஆ. பூங்குன்றனார், 6 B வகுப்பு, வித்தியானந்த கல்லூரி, முள்ளியவளை.

மனிதரை வளர்க்கும் தொழில் கமத் தொழில். கமத் தொழில் என்றால், நிலத்தைக் கொத்தி, உழுது, பசளை போட்டுப் பயிர்களை நட்டு வளர்ப்பதே. இத் தொழிலைக் கமக்காரர் விருத்தி செய்கிறார்கள். நமது நாட்டில் முன்பு இருந்தவர்கள் கமத் தொழிலை விரும்பிச் செய்தார்கள்.

நமது நாடு கமத் தொழில் நாடாகும். பண்டைக் காலத்தில் நமது நாட்டில் கமத் தொழில் சிறந்து விளங்கியது. நமது முன்னோர்கள் கமம் செய்து தங்களுக்குத் தேவையானதை எடுத்துக்கொண்டு மிகுதியை வெளி நாடுகளுக்கு ஏற்றுமதியும் செய்தார்கள்.

பிற் காலத்து அரசர்கள் குளங்கள் வெட்டுவித்துக் கமத் தொழிலை விருத்தி செய்தார்கள். வெளி நாட்டவர் இலங்கையைக் கைப்பற்றிய பின் கமத் தொழிலிற் கவனஞ் செலுத்தவில்லை. அதனால் கமத்தொழில் வீழ்ச்சி அடைந்தது. இங்கு விளையும் உணவு எமக்குப் போதாமையால் வெளிநாடுகளிலிருந்து உணவுப் பொருட்களை இறக்கு

மதி செய்யவேண்டியதாயிற்று. இப்போதும் உணவுப் பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டு வருகின்றன.

ஒரு காலத்தில் உணவுப் பொருட்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்த நம் ஈழநாடு இப்போது உணவுக்காக வெளிநாடுகளை எதிர்பார்த்திருப்பது துக்கத்திற்குரியதாகும்.

இலங்கை சுதந்திரம் அடைந்ததிற்குப் பின் கமத் தொழிலை விருத்தி செய்ய அரசாங்கம் பல முயற்சிகளைச் செய்து வருகிறது. தூர்ந்துபோன குளங்கள் புதுப்பிக்கப்பட்டுவருகின்றன. ஆயிரக் கணக்கான ஏக்கர் நிலம் கமக்காரருக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. கமக்காரருக்கு அரசாங்கம் பல உதவிகளைச் செய்து உணவுற்பத்தியைக் கூட்ட முயல்கிறது.

''உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்'' - குறள்

★

# குரங்கின் மடமை

''சிவம்''

அது ஒரு காடு. மரங்கள் அடர்ந்து வளர்ந்து, இருள் சூழ்ந்து இருக்கின்ற பெரிய காடு. விசாலமான இடத்தை அடக்கித் தன்னுள்ளே பல கொடிய விலங்குகளை அடக்கியவாறு இருந்தது அக் காடு.

கண்டோர் பயந்து நடுங்கும் தன்மையுடைய அவ்வனத்தின் ஒரு பாகத்திருந்த ஒரு புதர் சலசலத்தது. அதிலிருந்து ஒரு புலி வெளியே வந்தது. அதன் உடலில் இருந்த வரிகள் அதற்கு மிகவும் அழகைக் கொடுத்தன. அழகின் உள்ளேதான் ஆபத்தும் இருக்கும் என்பது எவ்வளவு உண்மை. ஆம் அப்புலியின் கண்ணைப் பார்த்ததும் எவருக்கும் ஒரு நடுக்கம் ஏற்பட்டே தீரும். அத்தகைய கொடூரம் அதன் கண்களில் இருந்தது.

மெதுவாக அக்கம்பக்கம் பார்த்து நடந்து வந்த அப் புலி ஒரு மரத்தருகில் வந்ததும் நின்றது. ''கீர்...'' என்ற உறுமலுடன் நிமிர்ந்தது. அங்கே ஒரு குரங்கு கீழே பார்த்த வாறு உட்கார்ந்திருந்தது. அதன் கண்களில் மருட்சி தென் பட்டது. அது புலியைப் பார்த்து பயத்துடன் கிரீச்சிட் டது.

புலியின் கண்களில் பசியின் ஆவலும், கொடூரமும் ஒருங்கே தெரிந்தன. நிமிர்ந்து அக் குரங்கைப் பார்த்து உறுமியது அச் சிறுத்தை. அதன் கண்களில் தென்பட்ட கொடூரத்தைக் கண்டதும் மயிரைச் சிலிர்த்தவாறு கிரீச் சிட்டது குரங்கு. அதைக் கேட்டோ என்னவோ வேறு மரத்திலிருந்த இரு குரங்குகள் அம் மரத்திற்குத் தாவின. மூன்றும் ஒருங்கே அமர்ந்திருந்தன. புலியோ அகன்ற பாடில்லை. அவ்விடத்திலேயே நின்றது.

சில நிமிடங்கள் தாண்டின. ''தூங்கும் சிங்கத்தின் வாயில் மான் வந்து விழுவதில்லை'' என்பதுபோல காத் திருப்பதைவிட்டு அப்புலி மரத்தில் ஏற ஆரம்பித்தது. இதைக்கண்ட மூன்று குரங்குகளும் அடுத்த மரத்திற்குத் தாவின. ஏமாற்றம் அடைந்த புலி திரும்பி மிக மெது வாக நடந்து சென்றது.

அப்புலி புதருள் மறைந்தது. வெற்றி பெற்ற மகிழ்ச்சி யுடன் மிகுந்த ஆரவாரம் செய்தன அந்தக் குரங்குகள். ஆரவாரித்த குரங்குகள் கீழே இறங்கின. நிலத்திலும் ஓடியாடித் தம் மகிழ்ச்சியை வெளிப்படுத்தின.

திடீரென்று அருகே இருந்த புதர் மீண்டும் சலசலத் தது. ஆனல் ஆரவாரம் செய்த அக் குரங்குகளின் காதில் அவ்வொலி விளவில்லை. மறுகணம் புதரிலிருந்து அதே புலி மிக்க ஆக்ரோஷத்துடன் பாய்ந்தது. அது பாய்ந்த இடத்தில் அதன் காலடியில் இரு குரங்குகள் அகப்பட்டுக் கொண்டிருந்தன.

ஆம். விதி நம்மிடம் எந்த நிமிடமும் விளையாடிக் கொண்டிருக்கும். துன்பம் நம்மைவிட்டகன்ற மறுநிமிடமே நமக்கு வேறொரு துன்பம் ஏற்படக்கூடும். இதை நாம் உணர்ந்து நடந்தால் நமக்குத் துன்பம் வருவதாகவே தோன்ருது.

# நாடகக் கலையும் நாமும்

அல்வைச் செல்வி

கலைத்தாயின் காலடியில் கணக்கற்ற கலைஞர்கள். கலைத்தாயின் புதல்வர்கள். கலைக்காக உடல் பொருள் ஆவி மூன்றினையுமே அர்ப்பணித்துவிடின் கலைத்தேவி அவர்களைக் கைதூக்காது விடாள். கலைக்காகத் தொண்டு புரிபவர்களுள் நாடகக் கலையை வளர்ப்பவர்களே முதற் கண் போற்றுதல் வேண்டும்.

ஆயகலைகள் அறுபத்து நான்கு. இவற்றுள் நாடகக் கலையை நாம் போற்றவேண்டும். ''நடிப்பு'' நம்மிடையேயுள்ள இயற்கைச் செல்வம். கடவுள் நமக்கே அன்றி பிற ஜீவராசிகட்கும் நடிப்பைக் கொடுத்திருக்கின்றார். இவ் வழியில் நாம் மேலோர். ''நடிப்பால்'' நாம் உயர்ந் திட்டமைக்கு நாடகம் ஓர் எடுத்துக்காட்டு.

எடுத்த கதை அம்சத்தைப் பலபேர் ஒன்றுகூடி யாவர்க்கும் உணரவைப்பதற்கு நாடகக் கலைஞர்கள் வல்லோர். நாடகத்தினை உய்த்தறியும்போது நமது கலைத்திறன் யாவர்க்கும் புலனாகின்றது.

கலைத்திறன் காணின் கலைஞர் கவினுறு காவியங்களுமே காண்டல் வேண்டும். இவற்றிற்கு எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தவை: சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி, இராமாயணம், குண்டலகேசி, வளையாபதி முதலியவை. இவற்றின்மூலம் நாடகத்தின் நற்பண்பை நாம் அறிய முடியும்.

இத்தகைய நாடகக்கலை நமது கண்ணெதிரே புனிதமிழந்து குற்றுயிரும் குலையுயிருமா யிருப்பதைப் பார்த்து நாம் வாளாவிருத்தல் மடமை அன்றோ! நம்மை வளர்த்தது நாடகக்கலை. கலைக்காகவே நாம் அன்றி நமக்காகக் கலை அன்று. இதனை நாம் உணர்ந்து கலைக்கு உலைவைக்கும் தான்தோன்றிகளை முறியடித்து கலைவாழ வழிவகுப்போமாக. மேலும் நம் மூதாதையர் போற்றிய நாடகக் கலையைப் போற்றிப் பாதுகாப்போமாக.

வாழ்க கலை! வளரட்டும் நம் கலைஞர்!

தொடர்ச்சி :

# கணக்கியலுக்கோர் அறிமுகம் (12)

வை. சி. சிவஞானம்

**இரட்டைப் பதிவுத் தத்துவம்:**

கணக்கியல் பதிவுகளுக்கு முக்கிய ஏடு பெயரேடு என்றும்' காசேடு பெயரேட்டின் ஒரு பகுதியாகவும் முதலேடாகவும் பயன்படுகிறதென்றும், ஏனைய முதலேடுகள் பெயரேட்டுக்குத் துணையாக விளங்குகிறதெனவும் முதல் அத்தியாயத்தில் கூறியதை ஞாபகப் படுததிக் கொள்க.

பெயரேட்டில் உள்ள கணக்குகள் எல்லாவற்றையும் மூன்று பெரும் பிரிவுக்குள் அடக்கலாம். அவையாவன

1. மெய்க்கணக்கு (பொருள் கணக்கு)
2. பெயருள் கணக்கு (மக்கள் கணக்கு)
3. பெயரளவுக் கணக்கு (இலாப நட்ட அங்கக் கணக்கு)

மெய்க்கணக்கு:

அசையும் அசைவிலா சொத்துக்களையும், உருவ அருவச் சொத்துக்களையும் குறிக்கும். நிலம், கட்டிடம், இயந்திரம், வாகனங்கள், சரக்கு, வங்கி காசு நன்மதிப்பு போன்றவை மெய்க்கணக்காகும்.

**கணக்கை எழுதும் விதி:**

பொருள்களைப் பெற்றால் (எம்மிடம் வந்தால் பற்று நிரலிலும்)
பொருள்களைக் கொடுத்தால் (எம்மிடமிருந்து வெளியே சென்றால்
வரவு நிரலிலும் அவ்வக் கணக்குகளில் பதிதல் வேண்டும்)

**பொருள்களின் பெறுமதி உயர்வு பற்றிலும்,**

**பொருள்களின் பெறுமதிக் குறைவு வரவிலும் பதிதல் வேண்டும்.**

காசைப் பெற்றால் காசுக்கணக்கில் பற்று நிரலிலும், வங்கியில் பணம் போட்டால் வங்கிக்கணக்கு பற்று நிரலிலும், சரக்கு கொள் முதல் செய்தால் கொள்முதற் கணக்கு பற்று நிரலிலும், சரக்கை ஒருவர் திருப்பி அனுப்பினால் திரும்பி வந்த சரக்கு கணக்குப் பற்று நிரலிலும், நிலம், கட்டிடம், இயந்திரம், வாகனம் போன்றவற்றைக் கொள்முதல் செய்தால் அவ்வக் கணக்கு பற்று நிரலிலும் பதிதல் வேண்டும்.

பணம் கொடுத்தால் காசுக்கணக்கு வரவு நிரலிலும், வங்கியில் பணம் எடுத்தால் வங்கிக் கணக்கு வரவு நிரலிலும். சரக்கை விற்பனை செய்தால் விற்பனைக் கணக்கு வரவு நிரலிலும், சரக்கைத் திருப்பியனுப்பினால் திரும்பிச் சென்ற சரக்குக் கணக்கு வரவு நிரலிலும், நிலம், கட்டிடம், இயந்திரம், வாகனம் போன்றவற்றைக் கொள் முதல் செய்தால் அவ்வக்கணக்கு பற்று நிரலிலும் பதிதல் வேண்டும்.

பணம் கொடுத்தால் காசுக்கணக்கு வரவு நிரலிலும், வங்கியில் பணம் எடுத்தால் வங்கிக் கணக்கு வரவு நிரலிலும், சரக்கை விற்பனை செய்தால் விற்பனைக்கணக்கு வரவு நிரலிலும், சரக்கைத் திருப்பி யனுப்பினல் திரும்பிச் சென்ற சரக்குக் கணக்கு வரவு நிரலிலும், நிலம், கட்டிடம், இயந்திரம், வாகனம் போன்றவை விற்கப்பட்டால் அல்லது பெறுமதி குறைந்தால் அத்தொகைகளை அவ்வக் கணக்குகளின் வரவு நிரலிலும் பதிதல் வேண்டும்.

பெயருள் கணக்கு (மக்கள் கணக்கு)

இக்கணக்கை கடன்பட்டோர் கடன்கொடுத்தோர் கணக்கு எனவும் கூறலாம். ஒவ்வொருவரின் பெயரில் இக்கணக்குகள் இருக்கும். பாலன் கணக்கு, குகன் கணக்கு, ஆனந்தன் கணக்கு என இருக்கும்.

கணக்கை எழுதும் விதி:

ஒருவர் பெற்ற தொகையை, அல்லது அவரால் வருமதித் தொகையை அவர் கணக்கின் பற்று நிரலிலும்,

அவர் தந்த தொகையை அல்லது அவருக்குக் கொடுக்க வேண்டிய தொகையை அவர் கணக்கின் வரவு நிரலிலும் பதிக.

பாலன் என்பவனுக்கு சரக்கு விற்பனை செய்தால் பாலன் கணக்கில் பற்று நிரலிலும், அவன் பணம் பெற்றால் அவன் கணக்கில் பற்று நிரலிலும், அவனுக்குச் சரக்குத் திருப்பியனுப்பப்பட்டால் அத்தொகை அவன் கணக்கின் பற்று நிரலிலும், அவன் கழிவு தந்தால் அவன் கணக்கில் பற்று நிரலிலும் பதிதல் வேண்டும். கொடுக்க வேண்டிய தொகையில் ஒரு பகுதியைக் கழித்துவிடுவதினால் அத்தொகை பெற்றதற்குச் சமனுகையால்தான் அத்தொகை பற்றில் பதியப்படுகிறது.

ஒருவர் பணம் தந்தால், அவரிடம் சரக்கு கொள்முதல் செய்தால், அவர் சரக்கைத் திருப்பியனுப்பினல், அவருக்குக் கழிவு கொடுத்தால் அத்தொகைகளை அவர் கணக்கின் வரவு நிரலில் பதிதல் வேண்டும். ஒருவர் தரவேண்டிய தொகையில் ஒரு பகுதியைக் கழித்துவிட்டால் அத்தொகை அவர் தந்ததாகவே கருதவேண்டும். எனவேதான அத்தொகை அவர்கணக்கில் வரவு நிரலில் பதியப்படுகிறது.

பெயரளவுக் கணக்கு (இலாப நட்ட அங்கக்கணக்கு:

எமது இலாபத்தை அதிகரிக்க அல்லது குறைக்க உதவும் கணக்குகள் பெயரளவுக் கணக்குகளாகும். வட்டி, வாடகை, தரகு, சம்பளம், கழிவு, வியாபாரச் செலவு, பெறுமானக் குறைவு, அறவிடமுடியாக் கடன் போன்றவை பெயரளவுக் கணக்குகளாகும்.

**கணக்கை எழுதும் விதி:**

நட்டத்தைத் தரும் நடவடிக்கைகளை அக்கணக்கின் பற்று நிரலிலும், இலாபத்தைத் தரும் நடவடிக்கைகளை அக்கணக்கின் வரவு நிரலிலும் பதிதல்வேண்டும். வட்டி, வாடகை, தரகு, கழிவு, சம்பளம், வியாபாரச்செலவு போன்றவை கொடுத்தால் எமது இலாபத்தை அல்லது வருமானத்தைக் குறைக்கும். எனவே அவ்வத் தொகைகளை அவ்வக் கணக்கின் பற்று நிரலில் பதிக. பெறுமானக் குறைவு என்பது ஒரு சொத்தின் பெறுமதி குறைதல். 500/= ரூபாவுக்குக் கொள்முதல் செய்யப்பட்ட ஒரு சொத்து ஒரு வருட முடிவில் 400/= ரூபா பெறுமதியுடையதாக இருந்தால் 100/= ரூபா பெறுமானக் குறைவாகும். இத்தொகை அறவிட முடியாக் கடன் பற்றில் பதியப்படும். அறவிடமுடியாக் கடன் என்பது கடன்பட்டோரிடமிருந்து பெற முடியாத தொகையாகும். இத்தொகையும் நட்டமாகையால் அறவிட முடியாக் கடன் கணக்கில் பற்றுநிரல்லிஎழுதப்படும் வட்டி, வாடகை, தரகு, கழிவுபோன்றவை பெறப்பட்டால் இலாபமாகும். எனவே அவ்வத்தொகைகள் அவவக் கணக்கின் வரவு நிரலில் பதியப்படும்.

**இதில் தவறு என்ன?**

15-3-69ல் வெளிவந்த வினாவுக்கு இதுவரை எவரும் சரியான பதில் அனுப்பவில்லை. இதோ சரியான விடை:

கிறீஸ்து பிறப்பதற்கு முன் நடைபெற்ற நிகழ்ச்சிகளைக் குறிப்பிடும்போது கிறீஸ்து பிறந்ததற்குப் பின்புதான் கி. மு. என்று குறிப்பிட முடியுமே தவிர அவர் பிறப்பதாக ஊகித்துக்கொண்டு அவர் பிறப்பதற்கு முன் நிகழ்ந்த நிகழ்ச்சிகளைக் கி.மு.எனக் குறிப்பிடுவது முடியாது. எனவே கூறியவர் குறிப்பிட்டநாணயத்தில் கி.மு. 15என்ற எண் இருந்திருக்க முடியாது. அவர் கூற்றுத் தவறாகும்.

**வியாபார நடவடிக்கைகள்:**

வியாபார சம்பந்தமான நிகழ்வுகளை வியாபார நடவடிக்கைகள் என்று கூறப்படும். கொள்முதல், விற்பனை, சரக்கைத் திருப்புதல், சரக்கைத் திரும்பப் பெறல், பணம் பெறல், பணங்கொடுத்தல், கழிவு பெறல், கழிவு கொடுத்தல், வாடகை பெறல், வாடகை கொடுத்தல் சம்பளம் கொடுத்தல் போன்ற ஏனைய செயல்கள் யாவும் வியாபார நடவடிக்கைகளாம்.

— தொடரும்




## அறிஞர் அண்ணா!

— நவாலியூர்க் கவிராயர் —

அண்ணா! அறிஞர் அண்ணா!
அகிலம் வாழும் எவரும்;
எண்ணா இன்பச் சுவையை
ஏட்டில் வடித்த அண்ணா!

தமிழை நாட்டின் பெயராய்
தந்தவர் அறிஞர் அண்ணா;
அமிழ்ந்து சென்ற எங்கள்
அகிலத் தாயை மீட்டார்!

நாடகம் நடித்தார் அன்று
நாட்டை ஆண்டார் பின்பு;
'நாடகம்' பெற்றே நாளும்
நாடினார் அகத்தால் வாழும்!

கவிதை கதையும் தந்து
கவரும் நாடகம் எழுதி;
புவியில் முத்தமி ழையுமே
புகழோ டிலங்கச் செய்தார்!

தமிழைப் புதிய மெருகில்
தரணியி லெங்கும் பேசும்
துமியை மழையாய்ப் பெய்து
துறந்தா ருலக வாழ்வை!

*★*

## வாத்து

கவிஞர் தே. ப. பெருமாள்

'குவ்வா குவ்வா' வாத்து
கூடி நீந்தும் வாத்து.

சேற்றில் இரையைத் தேடித்
தின்னு கின்ற வாத்து.

தண்ணீர் கண்டு குதித்துத்
தாவி நீந்தும் வாத்து.

முட்டை வாத்தும் இடவே
பெட்டைக் கோழி யதனை.

அடைகி டக்கக் குஞ்சும்
அழகாய் வெளியில் தோன்றும்!

# வெற்றி மணியோசை

× க. காளிதாசப் புலவர் ×

இனிய நல்ல மணியோசை
இலங்கை தன்னில் புதியோசை
எங்கும் பொங்கி ஒலிக்குதடா
இளைஞர் அறிவை வளர்க்குதடா

முள்ளிய வளையாம் முற்றமதில்
முழங்கு கின்ற தமிழோசை
அள்ளி இன்பம் தருகிறதே
அறிவு வெற்றி மணியோசை!

★★

# வானப் பந்தல்

— அழகனுர் —

நீல நீலப் பந்தல்
நீல வானப் பந்தல்
கோலம் யாவும் காட்டும்
குடையைப் போன்ற பந்தல்

மேகம் ஓடும் பந்தல்
மீன்கள் வாழும் பந்தல்
தாகம் போக்கும் நீரைத்
தரையில் கொட்டும் பந்தல்

கால்கள் இல்லாப் பந்தல்
கைக்கு எட்டாப் பந்தல்
பால் நிறத்து நிலவும்
பவனி செல்லும் பந்தல்

மின்னு கின்ற பந்தல்
மேலே அழைக்கும் பந்தல்
சின்னச் சின்ன மீன்கள்
சிரிக்கும் வானப் பந்தல்!

மதிப்புரை:

## "இப்படி எத்தனை நாட்கள்"

ஆசிரியர்: நா. க. தங்கரத்தினம்
சிவச்செல்வி வெளியீடு, கலையகம், கலைநகர், சித்தன்கேணி.
விலை: ரூபா 3-00

1965க்கும் 1968க்குமிடைப்பட்ட காலத்தில் ஆசிரியர் நா. க. தங்கரத்தினம் (நகுலன்) படைத்த பதினொரு கதைகள் இத்தொகுதியில் இடம்பெற்றுள்ளன. இக் கதைகள் அனைத்தும் அவ்வப்போது பத்திரிகைகளில் வெளிவந்தவையாயினும் அவற்றை ஒரு தொகுதியாக வைத்துப் பார்க்கையில் நூலாசிரியன் பெருநோக்கினையும் உள்ளப்பாங்கையும் நன்கு அறிந்துகொள்ளமுடிகிறது.

கலை கலைக்காக மட்டுமன்றிச் சமுதாயத்துக்கும் பெரிதும் பயன்படவும் வேண்டும் என்று உளமார நம்புபவர் தங்கரத்தினம் அவர்கள். சாதிப்பாகுபாடு, குடி, சூது, சீதனத் தொல்லை முதலியவற்றை நீக்கவேண்டுமென்னும் அடிப்படை நோக்கம் நூல் முழுவதும் இழையோடுகின்றது. ஒவ்வொரு கதையிலும் ஏதாவது ஒரு சமுதாயப் பிரச்சனை பளிச்சிடவே செய்கின்றது. உதாரணமாக 'பிறர் சொல்லைக் கேட்டுக் கண்மூடித்தனமாக நடக்காது சுயமாகச் சிந்தனை செய்' என்று புகட்டுகின்றது 'வாழ்வு மலருமா?'. 'இலட்சியம்' சீதன ஒழிப்பை வலியுறுத்துகின்றது. 'குடியிருந்த கோயில்' மகன் தாய்க்குச் செய்யவேண்டிய கடமையையும் செய்நன்றியுணர்வையும் உணர்த்துகின்றது. 'தோட்டியின் இரத்தம்' இரத்த தானத்தின் அவசியத்தை எடுத்துக் காட்டுகின்றது. இவ்வாறே ஒவ்வொரு கதையும் ஒவ்வொரு உயர்ந்த இன்றைய சமுதாயத்துக்கு இன்றியமையாத கருத்தை அடிப்படையாக வைத்துப் பின்னப்பட்டுள்ளது.

வெறும் உணர்ச்சியோடு கூடிய கதையை மட்டுங் கூறாது உண்மையோடு கூடிய கருத்தையும் வலியுறுத்தும்போது கதையின் பெறுமதி மேலோங்கவே செய்கின்றது.

படிப்பினைக் கருத்துக்களை வெளிப்படையாகவே போதிக்கலாமா? அவ்வாறு போதிக்க முனைவதால் சிறுகதைத் துடிப்புக் குன்றிவிடாதா? என்பதெல்லாம் பிரச்சனைக்குரிய கேள்விகள். புகழ்பெற்ற இக் காலக் கதையாசிரியர்கள் பலர் இவ்விடயத்தில் 'மறைமுக' உத்தியையே கையாளுகின்றார்கள். தங்கரத்தினம் அவர்கள் இக் கொள்கைக்கு மாறுபாடுபோலும் படிப்பினைக் கருத்துக்களைத் தனது பாத்திரங்கள் மூலம் நேரடியாகவே போதிக்கின்றார். அவ்வாறு போதிக்கையில் திருக்குறளும் பழமொழிகளும் ஆன்ற சொற்றொடர்களும் பிற பாடல்களும் மேற்கோளாகக் குதித்தெழுகின்றன.

ஈழத்தவர் பெருமைகொள்ளும் அளவுக்குக் கவர்ச்சியானமுறையில் 'ரெயின்போ பிரிண்டர்ஸ்' நூலை அச்சேற்றியுள்ளனர்.

பண்புமிகுந்த படிப்பினை நிறைந்த ''இப்படி எத்தனை நாட்கள்'' படித்துப் பார்க்கும் யார்க்கும் இன்பந்தரவல்ல நல்லதொரு சிறுகதைத் தொகுதி!

(வி. க.)

# அறிவுப் போட்டி இல. 8

## பரிசு ரூபா. 10-00

முடிவு திகதி:- 12-6-69 வியாழக்கிழமை

சரியான விடை 13-6-69 வெள்ளிக்கிழமை காலை 9-00 மணிக்கு நேயர்கள் முன்னிலையில் சக்தி அச்சகத்தில் திறக்கப்படும்.

ஐந்துக்குமேல் சரியான விடை கிடைத்தால் அதிஷ்டச் சீட்டு மூலமாக பரிசுக்குரியவர் தெரிவுசெய்யப்படுவர்.

சரியான விடை அனுப்பும் எல்லோருடைய பெயர் விலாசங்களும் 15-6-69 வெற்றிமணியில் வெளியிடப்படும்.

விடைகளைக் கீழேயுள்ள கூப்பனில் எழுதி அப்பகுதியை வெட்டி தபால் அட்டையில் ஒட்டி அறிவுப்போட்டி இல. 8, வெற்றிமணி முள்ளியவளை என்ற முகவரிக்கு அனுப்புக.

## குறிப்புகள் :-

1. இந்தியாவின் தற்காலிக ஜனாதிபதி யார்?
2. யூரிககாரின் முதன் முதல் செலுத்திச்சென்ற விண்வெளிக் கப்பலின் பெயர் என்ன?
3. உலகத்தில் உயரமான மலை எது?
4. முட்டைகளைப் பாதுகாக்க உதவும் இரசாயனப் பொருள் எது?
5. உலகிலேயுள்ள மிகச் சிறிய முலையூட்டி எது?
6. பூமிக்குக் கிட்ட உள்ள கிரகம் எது?
7. வண்டுண்ணு மலர் மரங்கள் இரண்டு எழுதுக?
8. கொழும்பில் சூரியன் உச்சங் கொடுக்கும் நாட்கள் எவை?

## அறிவுப் போட்டி இல. 8

1.................................. 2..................................

3.................................. 4..................................

5.................................. 6..................................

7.................................. 8..................................

பெயர்...................................................................

விலாசம்.................................................................

........................................................................

இலங்கையில் செய்திப்பத்திரிகையாகப்பதிவுசெய்யப்பட்டது Q.B 1338


**QUALIFIED OPTICIANS**

*Visit*

# MOHANLAL. C. VASA

No. 207, Second Cross Street,

**COLOMBO. 11.**

*Telegrams:* **VASAOPTICO** *Telephone:* **2931**

---

கண்களுக்குத் தேவையான

சகலவிதமான கண்ணாடிகளுக்கும்

எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்

## மோகன்லால் C. வாசா

இல. 207, இரண்டாங்குறுக்குத் தெரு,

கொழும்பு 11.

தொலைபேசி: 2931


இப்பத்திரிகை சக்தி அச்சகத்தினருக்காக, பொ. இராசரத்தினம் அவர்களால் முள்ளியவளை தண்ணீரூற்றிலுள்ள சக்தி அச்சகத்தில் 15-5-69 வியாழக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.